**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.150/2021**

| Deposition of Name | ஆனந்தன் | Prosecution | P.W-1 . LW-4 |
|---|---|---|---|
| Father Name | ஆறுமுகம் | Defence | |
| Police Station | புதுப்பட்டினம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 48/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**13.03.2026. எதிரி ஆஜர்**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் சந்திரா அவர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 10.01.2020 ம் தேதி மாலை 16.00 மணியளவில் புதுப்பட்டினம் சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவன், காவலர் காளிதாஸ் என்பவர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக கோட்டைமேடு கோட்டை அய்யாகோயில் பகுதியில் கண்காணித்து வந்த போது காலை மாலை 16.10 மணியளவில் பின்னர் பெயர் விலாசம் தெரிந்த எதிரி குருநாதன் த/பெ.குமார் எங்களை கண்டதும் தப்பித்து ஓட முற்பட்டவரை மடக்கி பிடித்து விசாரித்து அவர் நின்றிருந்த இடத்தை சோதனை செய்தபோது தலா 60 லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாலிதின்பையில் தலா 55 மில்லி லிட்டர் வீதம் மொத்தம் 110 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தார். அதனை அவர் வைத்திருப்பதற்கு எவ்வித அனுமதியோ உரிமமோ இல்லாததால் குற்ற காரணம் கூறி அதே இடத்தில் 16.10 மணிக்கு கைது செய்து பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் மேற்கண்ட போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் 16.15

மணிக்கு மசரில் கைப்பற்றினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–1 ஆக** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 16.25 மணிக்கு மேற்கண்ட அதே சாட்சிகள் முன்னிலையில் 32 TNP Actன் படி அழிப்புமகசர் தயார் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் **அழிப்பு மகசர் அ.சா.ஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகளை கைது செய்து 17.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து புதுப்பட்டினம் காவல்துறை குற்ற எண். 5/2020 4(1)(aaa) TNP Actன் கீழ் வழக்கினை பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் சிதம்பரம் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைது செய்யபட்ட எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் கடந்த 05.08.2020 ம் தேதி இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக 4(1)(aaa) TNP Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**